DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.456/2016**

**P.W.6**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | ஈஸ்வரன் |
| Father Name | : | செய்யாதுரை |
| VILLAGE | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2025.

( 2வது எதிரி ஆஜர். 3, 4 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 1வது எதிரி ஆஜர் இல்லை, 1வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது கே.கே.நகர் 9வது கிழக்கு தெருவில் குடியிருக்கிறேன். நான் பிசினஸ் செய்து வருகிறேன். எனக்கு அ.சா.1 ராமகிருஷ்ணனை தெரியும். எனக்கு ராஜ்மோகனை தெரியும். கடந்த 25.11.2015ம் தேதி SPK Hotelல் சாகுல் என்பவருடைய பிறந்தநாள் விழா நடந்தது. அந்த விழாவிற்கு என்னையும் அ.சா.1 ராமகிருஷ்ணன் அவர்களையும் அழைத்திருந்தார். என்னிடம் ராமகிருஷ்ணன் இன்னும் வரவில்லை, எனவே போன் செய்து பாருங்கள் என்று சாகுல் ஹமீது என்னிடம் சொன்னார். அதற்கு அ.சா.1 ராமகிருஷ்ணன் தான் புதூரிலுள்ள சலூனில் இருப்பதாகவும், முடித்துவிட்டு வருவதாகவும் சொன்னார். அதன்பின்பு 10, 15 நிமிடத்திற்குள் சலூன் கடைக்காரர் அர்ஜுணன் என்பவர் எனக்கு

போன் செய்து, அ.சா.1 ராமகிருஷ்ணனை தாக்கிவிட்டதாகவும், அவரை தேவதாஸ் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்துள்ளதாகவும் சொன்னார். நானும் மனோஜ் என்பவரும் கிளம்பி மேற்படி தேவதாஸ் மருத்துவமனைக்கு சென்றோம். சிறிது நேரத்தில் ராஜ்மோகனும் அங்கு வந்தார். அ.சா.1 ராமகிருஷ்ணனுக்கு காயம் அதிகமாக பட்டிருந்ததால் மதுரை அப்போலோ மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அ.சா.1 ராமகிருஷ்ணனை கொண்டு சேர்த்தோம். எனக்கு வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 21.11.2015ம் தேதி ராமகிருஷ்ணனுக்கு இரவு 10.30 மணியை போல் போன் செய்து சாகுல் பர்த்டேக்கு வரலையாடா என்று நானும் மனோஜ் என்பவரும் கேட்டோம் என்றும், அழகர் கோவில் மெயின் ரோட்டிலுள்ள குரு சலூன் கடையில் முடி கட் செய்துவிட்டு வருகிறேன் என்று சொன்னார் என்றும், சிறிது நேரத்தில் 11.15 மணிக்கு சலூன் கடை உரிமையாளர் அர்ஜுனன் என்பவர் எனக்கு போன் செய்து ராமகிருஷ்ணனை சகாய பிரவீன் என்பவர் கத்தியால் குத்திவிட்டதாகவும், தேவதாஸ் மருத்துவமனைக்கு கொண்டு சென்றிருக்கிறோம் என்றும் தகவல் தெரிந்து நானும் தேவதாஸ் மருத்துவமனைக்கு சென்றேன் என்றும், அங்கிருந்து நண்பர் ராஜ்மோகனுக்கு செல்போனில் தகவல் சொன்னேன் என்றும், ராமகிருஷ்ணனை ஆம்புலன்ஸ் மூலமாக அப்போலோ மருத்துவமனைக்கு

மேல்சிகிச்சைக்காக சேர்த்தோம் என்றும், சேர்த்த போது அவரது தம்பி மகேஸ்வரனின் பெயரை சொல்லி சேர்த்தோம் என்றும், மறுநாள் காலையில் 21.11.2015ம் தேதி மயக்கம் தெளிந்து சம்பவத்தை அவர் சொன்னார் என்றும், இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–** இல்லை.

**மறு விசாரணை –** இல்லை.